



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

“தேமதுரத் தமிழோசை உலகமெலாம்”






Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 303 26.04.2026 SUNDAY CHITHIRAI: 13 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 303 26.04.2026 ஞாயிற்றுக்கிழமை சித்திரை : 13 விலை : ரூ.5/–


## தமிழகம், மேற்கு வங்கத்தில் எங்கும்

# ‘மறு வாக்குப்பதிவு இல்லை’

## தேர்தல் அதிகாரிகள் தகவல்

புதுடெல்லி: ஏப்.26-

கடந்த 23ம் தேதி நடந்த தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் மற்றும் மேற்கு வங்க சட்டப்பேரவை முதற்கட்டத் தேர்தல் ஆகியவற்றில் எந்த வாக்குச் சாவடியிலும் மறு வாக்குப்பதிவுக்கு உத்தரவிடப்படவில்லை என்று இந்திய தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழகத்தின் 234 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக கடந்த 23ம் தேதி தேர்தல் நடைபெற்றது. மொத்தம் 75,064 வாக்குச்சாவடிகளில் வாக்குகள் பதிவு செய்யப்பட்டன. இதில், வரலாறு காணாத அளவாக 85.15% வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.




அதே நாளில் மேற்கு வங்க சட்டப்பேரவைக்கான முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெற்றது. மொத்தமுள்ள 294 சட்டப்பேரவைத் தொகுதிகளில் 152 தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெற்றது. 44,376 வாக்குச் சாவடிகளில் வாக்குகள் பதிவு செய்யப்பட்டன. இந்த தேர்தலில் 92% வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில், இவ்விரு மாநில தேர்தல்களில் எங்கும் மறு வாக்குப்பதிவுக்கு உத்தரவிடப்படவில்லை என்று இந்திய தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த முடிவை எடுப்பதற்கு முன், தேர்தல் பார்வையாளர்களின் கருத்துகள், கள அறிக்கைகள் உள்ளிட்ட வழக்கமான ஆய்வு முறைகள் அனைத்தும் கவனமாக பரிசீலிக்கப்பட்டதாகவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

மறு வாக்குப்பதிவை அவசியமாக்கும் வகையிலான பெரிய அளவிலான இடையூறுகள் ஏதும் இன்றி வாக்குப் பதிவு நிறைவடைந்துள்ளதே இதற்குக் காரணம் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

## வக்பு வாரியத்துக்கு முதன்மை செயல் அதிகாரியாக ஐஏஎஸ் அதிகாரியை நியமிக்கக்கோரி வழக்கு

### தமிழக அரசு பதிலளிக்க உத்தரவு

சென்னை: ஏப்.26-

தமிழ்நாடு வக்பு வாரியத்துக்கு இணைச் செயலாளர் அந்தஸ்தில் உள்ள ஐஏஎஸ் அதிகாரியை முதன்மை செயல் அதிகாரியாக நியமிக்கக்கோரி தொடரப்பட்ட வழக்கில், தமிழக அரசும், வக்பு வாரியமும் 4 வார காலத்துக்குள் பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



இதுதொடர்பாக வக்பு வாரிய பாதுகாப்புக்குழு அறக்கட்டளை தலைவரான மதுரை கட்ராபாளையத்தைச் சேர்ந்த எம்.அஜ்மல்கான் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில், தமிழகம் முழுவதும் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள வக்பு வாரிய சொத்துக்களை கண்காணித்து பாதுகாக்கும் பொறுப்பும், கடமையும் முதன்மை செயல் அதிகாரிக்கே உள்ளது.

ஆனால் தமிழ்நாடு வக்பு வாரியத்தில் பணிபுரிந்த முன்னாள் முதன்மை செயல் அதிகாரிகள், கண்காணிப்பாளர்கள், இளநிலை உதவியாளர் உள்ளிட்ட பலர் தங்களுக்குள் கூட்டணி அமைத்து ரூ.2 ஆயிரம் கோடி மதிப்புள்ள வக்பு வாரிய சொத்துக்களுக்கு சட்டவிரோதமாக தடையில்லா சான்று வழங்கி அவற்றை விற்பனை செய்து மோசடியில் ஈடுபட்டுள்ளது தொடர்பாகவும், தவறு செய்த வக்பு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரியும் ஏற்கெனவே உயர் நீதிமன்றத்தில் அவமதிப்பு வழக்கு தொடர்ந்துள்ளேன்.

அந்த வழக்கில் தவறு செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க உயர் நீதிமன்றமும் உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில் வக்பு வாரிய திருத்தச் சட்டப்படி மாநில வக்பு வாரியத்துக்கு தமிழக அரசின் இணைச் செயலாளர் அந்தஸ்துக்கு குறையாத ஐஏஎஸ் அதிகாரியை நிரந்தர முதன்மை செயல் அதிகாரியாக நியமிக்க வேண்டும்.

ஆனால் தமிழக அரசு துணைச் செயலாளர் கிரேடு 2 அந்தஸ்தில் உள்ள சென்னை மாநகராட்சியில் அடையாறு மண்டல துணை ஆணையராக பணியாற்றிய ஐஏஎஸ் அதிகாரியான அப்தாப் ரசூல் என்ற அதிகாரியை வக்பு வாரியத்தின் முதன்மை செயல் அதிகாரியாக கடந்தாண்டு மே மாதம் நியமித்துள்ளது.

இது வக்பு வாரிய சட்டத்துக்கு எதிரானது என்பதால் அப்தாப் ரசூல் வக்பு வாரியத்தின் முதன்மை செயல் அதிகாரியாக பதவி வகிக்க தடை விதிக்க வேண்டும்.

அத்துடன் வக்பு வாரியத்துக்கு இணைச் செயலாளர் அந்தஸ்தில் உள்ள ஐஏஎஸ் அதிகாரியை முதன்மை செயல் அதிகாரியாக நியமிக்க தமிழக அரசுக்கு உத்தரவிட வேண்டும், எனக் கோரியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி எம்.தண்டபாணி முன்பாக நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் எம். ராமமூர்த்தி ஆஜராகி வாதிட்டார்.

அதையடுத்து நீதிபதி எந்த அடிப்படையில் ஐஏஎஸ் அதிகாரியான அப்தாப் ரசூல் வக்பு வாரியத்தின் முதன்மை செயல் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார் என்பதற்கான ஆவணங்களை 4 வார காலத்துக்குள் தாக்கல் செய்ய தமிழக அரசுக்கும், வக்பு வாரியத்துக்கும் உத்தரவிட்டு விசாரணையை தள்ளி வைத்துள்ளார்.

## பிரச்சாரத்தின்போது புறாவுக்கு தவெக வண்ணம்: விஜய்க்கு பீட்டா அமைப்பு எதிர்ப்பு

சென்னை: ஏப்.26-

தேர்தல் பிரச்சாரத்தின்போது புறாவுக்கு தவெக வண்ணம் பூசப்பட்டு பறக்கவிடப்பட்ட விவகாரத்தில் கட்சியின் தலைவர் விஜய்க்கு பீட்டா அமைப்பு எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

திருச்சியில் ஏப்.19ம் தேதி தவெக தலைவர் விஜய் மேற்கொண்ட பிரச்சாரத்தின் போது, தவெக கட்சியின் வண்ணம் பூசப்பட்ட புறா பறக்கவிடப்பட்டது. இது தொடர்பாக பீட்டா இந்தியா அமைப்பு கட்சியின் தலைவர் விஜய்க்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

அந்த கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது: சமீபத்தில் தவெக கட்சிப் பிரச்சாரத்தில் புறாவுக்கு வண்ணம் பூசப்பட்டு பறக்கவிட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வண்ணம் பூசப்பட்ட புறா, இரைச்சலான மற்றும் கூட்ட நெரிசலான சூழலில் விடுவிக்கப்படுவது அந்தப் பறவைகளுக்குக் கடுமையான மன அழுத்தத்தையும், உடல் ரீதியான காயங்களையும், நீண்ட கால பாதிப்புகளையும் ஏற்படுத்துகிறது.

பறவைகளின் இறகுகளில் பூசப்படும் பெயின்ட் அல்லது சாயங்கள், அவற்றின் வெப்ப ஒழுங்குமுறை மற்றும் பறக்கும் திறனைப் பாதிப்பதோடு, அவை தங்களைச் சுத்தம் செய்யும் போது அந்த நச்சுப் பொருட்களை உட்கொள்ளவும் வாய்ப்புள்ளது.

இந்தச் செயல் விலங்குகள் மீதான கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் கடுமையான விதிமீறலாகும். மேலும் இது தேர்தல் பிரச்சாரத்தின் போது விலங்குகளைப் பயன்படுத்தக்கூடாது என்ற இந்தியத் தேர்தல் ஆணையத்தின் ஆலோசனையை மீறுவதாகவும் உள்ளது.

இந்த விவகாரத்தில் தவெக தலைவர் விஜய் உடனடியாகத் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக, வண்ணம் பூசப்பட்டு பயன்படுத்தப்பட்ட அந்தப் பறவைகளை, உரிய சிகிச்சை மற்றும் மறுவாழ்வு அளிப்பதற்காக உடனடியாகப் பீட்டாவிடம் ஒப்படைக்க வேண்டும்.

தேர்தல் பிரச்சாரங்களில் விலங்குகளைப் பயன்படுத்துவதை முற்றிலும் தடை செய்யும் வகையில் ஓர் உறுதியான கொள்கையை வகுக்க வேண்டும்.

கட்சியின் தொண்டர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்களுக்கு விலங்குகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

சட்டம் மற்றும் விலங்குகளின் நலனைக் கருத்தில் கொண்டு, தனது தலைமைத்துவத்தின் கீழ் இத்தகைய தவறான செயல்களைத் தடுத்து நிறுத்த விஜய் நடவடிக்கை வேண்டும். இவ்வாறு அந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

## “வாக்கு எண்ணிக்கையின் போது அதிமுக, கூட்டணிக் கட்சி முகவர்கள் கவனம்” இபிஎஸ் அறிவுரை

சென்னை: ஏப்.26-



“வாக்கு எண்ணிக்கை முடியும்வரை மிகுந்த விழிப்புடனும், கவனத்துடனும் அயராது பணியாற்றிட வேண்டுகிறேன். தமிழக மக்களைக் காப்பதற்காக, தீயசக்தி திமுக மீண்டும் தலையெடுத்துவிடாமல் தடுத்து நிறுத்துவோம்” என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “நடந்து முடிந்த தமிழக சட்டப்பேரவைத் பொதுத் தேர்தலில் ஏப். 23 அன்று தமிழ் நாட்டில் நல்லாட்சி மலர வேண்டும் என்பதற்காக, கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் காலை 7 மணி முதல் மாலை வரை வரிசையில் நின்று, தமிழக வரலாற்றில் முன்எப்போதும் இல்லாத அளவில் மிக அதிகமான வாக்குப் பதிவை உறுதி செய்துள்ள தமிழக வாக்காளப் பெருமக்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் தற்போது நடைபெற்று வரும் திமுக அரசின் மீது மக்களுக்கு இருக்கின்ற வெறுப்பை நாம் கண்கூடாகக் கண்டோம். விரக்தியின் விளிம்பில் உள்ள திமுகவினர், எப்படி புறவாசல் வழியாக ஆட்சியைப் பிடிக்கலாம் என்ற எண்ணத்தோடு, அதற்கான முயற்சிகளை இந்தத் தேர்தலிலும் எடுப்பதற்குத் தயாராக உள்ளனர்.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் பொதுத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு ஏப். 23 அன்று முடிந்துள்ள நிலையில், மே.4 அன்று வாக்கு எண்ணும் பணி நடைபெற உள்ளது. இதற்காக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், கூட்டணிக் கட்சிகளின் சார்பிலும் முகவர்களாக நியமிக்கப்பட்டிருக்கும் அனைவரும் மிகுந்த கவனத்துடனும், விழிப்புடனும் பணியாற்றி, வெற்றிக் கனியை சிந்தாமல், சிதறாமல் பெற்று கழகத்திற்கும், கூட்டணிக் கட்சிகளுக்கும் சமர்ப்பிக்கும் வகையில், பின்வரும் முக்கிய அம்சங்களை நினைவில் கொண்டு பணியாற்றிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வாக்கு எண்ணிக்கையின்போது கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய அம்சங்கள்: வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாளான 4.5.2026 அன்று, கழகத்தின் சார்பிலும், கூட்டணிக் கட்சிகளின் சார்பிலும் நியமிக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணிக்கை முகவர்கள் அனைவரும், அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் வேட்பாளர்களுடைய அறிவுறுத்தலின்படி, தேர்தல் ஆணையம் குறிப்பிட்ட நேரத்திற்கு ஒரு மணி நேரம் முன்பாகவே, தேர்தல் நடத்தும் அலுவலரால் தங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் அடையாள அட்டையுடன் வாக்கு எண்ணும் மையங்களுக்குச் செல்ல வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் காலதாமதமாக செல்லக்கூடாது.

வாக்கு எண்ணும் மையத்தில், வாக்கு எண்ணும் மேஜைகளுக்கு ஏற்றார்போல் முகவர்களை நாம் நியமித்திருக்கிறோம். அந்த முகவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற நாற்காலிகளுக்குச் சென்று அமர்ந்துவிட வேண்டும். வாக்கு எண்ணும் மையத்திற்கு உள்ளே சென்றவர்கள், வாக்கு எண்ணிக்கை முடிவுற்று தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படுகின்ற வரையிலும், எக்காரணத்தைக் கொண்டும் வாக்கு எண்ணும் மையங்களில் இருந்து வெளியே வரக் கூடாது. மிகுந்த கவனத்தோடு வாக்கு எண்ணிக்கையை கண்காணிக்க வேண்டும்.

வாக்கு எண்ணிக்கை மையங்களில் அனைத்து ஏற்பாடுகளும் முறைப்படி செய்யப்பட்டுள்ளனவா என்பதையும் உறுதி செய்திட வேண்டும்.

தபால் வாக்கு எண்ணிக்கை நடைபெறும்போது, மிகவும் கவனமுடன் கண்காணிக்க வேண்டும்.

வாக்குப் பதிவு இயந்திரங்களில் வைக்கப்பட்டுள்ள சீல் முறையாக உள்ளதா என்பதை உறுதி செய்திட வேண்டும்.

வாக்குப் பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகளும், ஏற்கெனவே படிவம் 17சின்படி வாக்குப் பதிவு நாளன்று பதிவு செய்யப்பட்ட வாக்குகளும் சரியாக உள்ளதா என்பதை ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ள வேண்டும். மேலும், வாக்குப் பதிவு இயந்திரத்தில் உள்ள தேதியையும், நேரத்தையும் சரிபார்த்துக்கொள்ள வேண்டும்.

வாக்குப் பதிவு இயந்திரத்தின் சீல்களும், பதிவான வாக்குகளின் எண்ணிக்கையும் சரியாக இருந்தால் மட்டுமே, வாக்கு எண்ணிக்கையை தொடங்க அனுமதிக்க வேண்டும்.

ஒவ்வொரு சுற்றிலும் வாக்கு எண்ணிக்கையின் முடிவுகள் அறிவிக்கப்படும் போதும், நீங்கள் குறித்து வைத்திருக்கின்ற வாக்குகள், தேர்தல் நடத்தும் அலுவலரால் சரியாக அறிவிக்கப்படுகிறதா என்பதை கவனமுடன் பார்க்க வேண்டும்.

ஏதேனும் மாறுதல்கள் இருக்கின்றபட்சத்தில், வாக்கு எண்ணிக்கையை தொடராமல் தேர்தல் நடத்தும் அலுவலரிடத்திலே தெரியப்படுத்த வேண்டும். வாக்கு எண்ணிக்கை முகவர்களுக்கு ஏற்படுகின்ற சந்தேகங்களை, வாக்கு எண்ணும் மையத்தின் பிரதான மேஜையின் முன்பு அமர்ந்திருக்கின்ற வேட்பாளரின் தலைமை முகவரிடத்திலே தெரியப்படுத்தி, அதை எழுத்துப்பூர்வமாக வேட்பாளரின் சார்பாக தேர்தல் நடத்தும் அலுவலரிடத்திலே கொடுத்து அதற்குண்டான ஒப்புகையை கட்டாயம் கேட்டுப் பெறவேண்டும். அதற்கான தீர்வு கிடைத்த பின்னர்தான், அடுத்த சுற்று வாக்கு எண்ணிக்கை நடைபெறுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

வாக்கு எண்ணும் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் யாரேனும், மாற்றுக் கட்சியினருக்கு ஆதரவாகவும், முறைகேடாகவும் செயல்படுகிறார்களா என்பதை உன்னிப்பாகக் கண்காணித்து, குறைகள் இருப்பின் சம்பந்தப்பட்ட மேலதிகாரிக்கு உடனடியாக தகவல் தெரிவித்து உரிய தீர்வினை காண வேண்டும்.

திமுகவினர் வதந்திகளைப் பரப்புவதிலும், தில்லுமுல்லு செய்வதிலும், வன்முறையில் ஈடுபடுவதிலும் மிகவும் கைதேர்ந்தவர்கள் என்பதை இந்த நாடே நன்கு அறியும். இதற்கு, கடந்த காலங்களில் நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகளை உதாரணமாகச் சொல்லலாம். ஆகவே, வாக்கு எண்ணும் மையங்களில் திமுகவினரால் தில்லுமுல்லு ஏதேனும் நடத்தப்படுகிறதா என்பதை மிகுந்த விழிப்போடு கண்காணித்து, முறைகேடுகள், துஷ்பிரயோகங்கள் ஏதேனும் நிகழ்ந்தால், அது சம்பந்தமாக மேலதிகாரிக்கு உடனடியாக தகவல் தெரிவித்து உரிய தீர்வு காண வேண்டும்.

வாக்கு எண்ணிக்கை முகவர்கள் அனைவரும் தங்களுக்கான வாக்கு எண்ணிக்கை மையங்களில், அனைத்து சுற்று வாக்கு எண்ணிக்கையும் நிறைவடைந்து முடிவு அறிவிக்கப்பட்ட பின்னர் தான் அங்கிருந்து வெளியே வரவேண்டும்.

வேட்பாளர்கள் மற்றும் அவர்களுக்கென நியமிக்கப்பட்டுள்ள chief agent களும், தங்களுக்கான வாக்கு எண்ணும் மையங்களில், வாக்கு எண்ணும் பணி முறையாக நடைபெறுகின்றனவா என்பதை விழிப்போடு கண்காணிக்க வேண்டும்.

அதிமுக மற்றும் கூட்டணிக் கட்சிகளின் சார்பிலும் போட்டியிடும் வேட்பாளர்களின் வெற்றியை உறுதி செய்திடும் வகையிலும், மக்கள் தீர்ப்பு நிலைநாட்டப்படும் வகையிலும், அனைவரும் மிகவும் விழிப்புடன் பணியாற்றிட வேண்டும். இது, ஜனநாயகப் பயிர் தழைத்தோங்க நாம் அனைவரும் ஆற்ற வேண்டிய இன்றியமையாத கடமை என்பதை நினைவில் கொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தமிழக மக்களைக் காப்பதற்காக, தீயசக்தி திமுக மீண்டும் தலையெடுத்துவிடாமல் தடுத்து நிறுத்துவோம்“ இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# கம்பம் பட்டாசு ஆலையில் விபத்து: 2 தொழிலாளர்கள் உயிரிழப்பு




கம்பம், ஏப்.26-

கம்பம் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் சிக்கி இருவர் உடல் சிதறி உயிரிழந்தனர்.கம்பம் பாரதியார் நகரைச் சேர்ந்த திருப்பதி. இவர் கம்பம் மேற்கு பகுதியான காட்டுப்பள்ளி வாசல் சாலையில் பட்டாசு ஆலை நடத்தி வருகிறார். சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு அரசு உத்தரவின்படி கடந்த 21ஆம் தேதி முதல் 24 ஆம் தேதி பட்டாசு ஆலை மூடப்பட்டது. மீண்டும் இன்று (சனி) காலை தொழிற்சாலை செயல்படத் தொடங்கியது.இங்கு கம்பம் பாரதியார் நகரைச் சேர்ந்த அய்யப்பன் (27) , நாகார்ஜுன் (22) , சாலிமரம் தெருவைச் சேர்ந்த சூர்யா (22) மற்றும் நெல்லு குத்தி புளியமரம் தெருவை சேர்ந்த தினேஷ் (20), ஆகியோர் வேலை செய்து கொண்டிருந்தனர்.

இந்நிலையில் சூர்யா , தினேஷ் ஆகியோர் வெடி மருந்து எடுப்பதற்காக கிடங்கைத் திறந்தனர். அப்போது எதிர்பாராத விதமாக பலத்த சத்தத்துடன் வெடிமருந்து வெடித்தது. இதில் சூர்யா, தினேஷ் தூக்கி எறியப்பட்டு உடல் சிதறி உயிரிழந்தனர். அருகில் இருந்தவர்கள் கம்பம் வடக்கு காவல் நிலையம் மற்றும் தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவித்தனர்.சம்பவ இடத்துக்கு வந்த போலீஸார் மற்றும் தீயணைப்புத்துறையினர் சிதறிக் கிடந்த சூர்யா , தினேஷின் உடலை கைப்பற்றி பிரேதப் பரிசோதனைக்கு அனுப்பினர். கம்பம் வடக்கு போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரிக்கின்றனர்

# பாகிஸ்தான் ராணுவ தளபதியுடன் ஈரான் வெளியுறவு அமைச்சர் பேச்சுவார்த்தை



இஸ்லாமாபாத், ஏப்.26-


ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி, பாகிஸ்தான் ராணுவத் தளபதி பீல்டு மார்ஷல் அசிம் முனீரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

கடந்த பிப்ரவரி 28ம் தேதி முதல் அமெரிக்கா, ஈரான் இடையே போர் நடைபெற்று வந்தது. கடந்த 8ம் தேதி இருதரப்பு இடையே போர் நிறுத்தம் அமல் செய்யப்பட்டது. இந்த இரு வார போர் நிறுத்தம் கடந்த 23ம் தேதியுடன் நிறைவடைந்த நிலையில், காலவரையின்றி போர் நிறுத்தத்தை நீட்டிப்பதாக அன்றைய தினம் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் அறிவித்தார்.போர் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் ராணுவம் மூடியுள்ளது. இதேபோல இந்த ஜலசந்தியின் இருபுறமும் அமெரிக்க போர்க்கப்பல்கள் நிறுத்தப்பட்டு உள்ளன. இந்தச் சூழலில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் சமூக வலைதளத்தில் நேற்று வெளியிட்ட பதிவில், “காலம் கடந்து சென்று கொண்டிருக்கிறது. ஈரான் தரப்பு விரைந்து முடிவு எடுக்க வேண்டும்'' என்று எச்சரித்திருந்தார்.

அமெரிக்கா ஈரான் இடையே அமைதி ஒப்பந்தத்தை இறுதி செய்ய பாகிஸ்தான் தீவிர முயற்சி செய்து வரும் நிலையில், ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி, பாகிஸ்தான் ராணுவத் தளபதி பீல்டு மார்ஷல் அசிம் முனீரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். பாகிஸ்தான் வந்த பிறகு அவர் மேற்கொண்ட முதல் அதிகாரப்பூர்வ சந்திப்பு இதுவாகும். இந்த சந்திப்பை அடுத்து, பாகிஸ்தான் துணைப் பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான இஷாக் தர்ஜ அப்பாஸ் அராக்சி சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த சந்திப்பின்போது ஈரான் தரப்பில் துணை வெளியுறவு அமைச்சர் காசிம் கிரபாபாடி, தூதர் ரெசா அமிரி மொகாதம், வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் இஸ்மாயில் பாகாயி ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். பாகிஸ்தான் தரப்பில் உள்துறை அமைச்சர் மொஹ்சின் நக்வி உள்ளிட்ட உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.இந்த சந்திப்பின்போது, அமைதிக்கான அமெரிக்காவின் நிபந்தனைகள் விஷயத்தில் ஈரானின் பதிலை அராக்சி தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. முன்னதாக அவர் வெளியிட்ட ஒரு எக்ஸ் பதிவில், “ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே எந்த சந்திப்பும் நடைபெற திட்டமிடப்படவில்லை. ஈரானின் கருத்துக்கள் பாகிஸ்தானுக்கு தெரிவிக்கப்படும்'' என்று தெரிவித்திருந்தார். இதனிடையே, ஈரானுடனான இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதற்காக மத்திய கிழக்குக்கான அமெரிக்க சிறப்புத் தூதர் ஸ்டீவ் விட்காப், அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப்பின் ஆலோசகர் ஜாரெட் குஷ்னர் ஆகியோர் பாகிஸ்தானுக்குப் புறப்படுவார்கள் என்று வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் கரோலின் லீவிட் தெரிவித்துள்ளார்.மேலும் அவர், “அதிபர் ட்ரம்ப் எப்போதும் ராஜதந்திரத்துக்கு ஒரு வாய்ப்பு கொடுக்க விரும்புகிறார். அதுவே அவரது முதல் தேர்வாக எப்போதும் இருக்கிறது. இங்கும் இதையே அவர் செய்ய விரும்புகிறார்'' என தெரிவித்துள்ளார்.

# நாசிக் டிசிஎஸ் மதமாற்ற வழக்கு: திடீரென பணி விலகிய ஊழியர்களிடம் மீண்டும் எஸ்ஐடி தீவிர விசாரணை



மும்பை. ஏப்.26-

மகாராஷ்டிராவின் நாசிக் நகரில் டிசிஎஸ் நிறுவனத்தின் பிபிஓ அலுவலகம் செயல்படுகிறது. இந்த நிறுவனத்தில் பெண் ஊழியர்களை அதிகாரிகள் மிரட்டி பாலியல் வன்கொடுமை, பாலியல் துன்புறுத்தல் மற்றும் மதம் மாற கட்டாயப்படுத்தியாக புகார் எழுந்துள்ளது.

கடந்த 2022 பிப்ரவரி முதல் 2026 மார்ச் வரை நடந்ததாக கூறப்படும் இந்த குற்றங்கள் தொடர்பாக 9 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. குழுத் தலைவர்கள் மற்றும் மனிதவளத் துறையின் உதவிப் பொது மேலாளர் உட்பட 8 ஊழியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். முக்கிய குற்ற வாளியாக கருதப்படும் பெண் அதிகாரி நீடா கான் தலைமறைவாக இருக்கும் நிலையில் அவரை கைது செய்ய 3 தனிப் படைகள் அமைக்கப்பட்டுள்ளன.இந்நிலையில் இந்த வழக்கில் 2022 மற்றும் 2024க்கு இடையில் திடீரென பதவி விலகிய முன்னாள் ஊழியர்களிடம் எஸ்ஐடி மீண்டும் விசாரணை நடத்தி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. பாதிக்கப்பட்ட பெண் ஊழியர்கள், நிறுவனத்தின் மனிதவளத் துறைக்கு 78க்கும் மேற்பட்ட மின்னஞ்சல்கள் அனுப்பியதாகவும், பலமுறை தொலைபேசி அழைப்புகள் செய்ததாகவும் கூறுகின்றனர். ஆனால், எதன் மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.கைதானவர்களில் ஒருவரான மனிதவள அதிகாரி அஸ்வினி சைனானி, பாதிக்கப்பட்ட பெண்ணிடம் ''இதுபோன்ற விஷயங்கள் நடப்பது சகஜம்தான்'' என்று கூறி, புகார் அளிப்பதைத் தடுத்ததாகவும், இந்த விஷயத்தை கைவிடுமாறு வற்புறுத்தியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். அவர் ஏப்ரல் 28 வரை 14 நாட்கள் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.அஸ்வினி, இந்துப் பெண் ஊழியர்களைக் குறிவைத்து வாட்ஸ் அப் குழுக்களை உருவாக்கி, அவர்களின் விருப்பத்துக்கு எதிராக மதச் சடங்குகளில் ஈடுபடுமாறு கட்டாயப்படுத்தியதாக தெரிய வந்துள்ளது. இந்த கும்பலால் வேறு பெண்கள் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்கள் புகார் அளித்திட தனி வாட்ஸ் அப் எண்ணை போலீஸார் அறிவித்துள்ளனர். இந்த விவகாரத்தில் மேலும் சிலர் கைது செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# உள்கட்சி மோதலால் 'ஆம் ஆத்மி'யில் இருந்து விலகி பாஜகவில் இணைந்த 7 எம்பிக்கள்



புதுடெல்லி.ஏப்.26-

ஆம் ஆத்மி கட்சியின் முக்கியத் தலைவர் ராகவ் சத்தா உள்ளிட்ட 7 மாநிலங்களவை எம்.பிக்கள், அக்கட்சியில் இருந்து விலகி பாஜகவில் இணைந்துள்ளனர். கட்சி ஒருங்கிணைப்பாளர் அர்விந்த் கேஜ்ரிவால் மீதான அதிருப்தியின் காரணமாக அவர்கள் இந்த முடிவை எடுத்துள்ளனர். இது ஆம் ஆத்மி கட்சிக்கு பெரும் பின்னடைவாக கருதப்படுகிறது.ஆம் ஆத்மி கட்சிக்கு மாநிலங்களவையில் 10 எம்.பி.க்கள் உள்ளனர். கட்சியின் முக்கியத் தலைவரான ராகவ் சத்தா எம்.பி., அக்கட்சியின் மாநிலங்களவை துணைத் தலைவராக இருந்து வந்தார். சமீபத்தில் அந்த பொறுப்பில் இருந்து அவர் நீக்கப்பட்டு, அவருக்கு பதிலாக அசோக் மிட்டல் நியமிக்கப்பட்டார். இந்த சூழலில், கடந்த சில வாரங்களாகவே, கட்சித் தலைமைக்கும் ராகவ் சத்தாவுக்கும் இடையே மோதல் போக்கு நிலவி வந்தது. இந்நிலையில், அவர் அக்கட்சியில் இருந்து விலகி பாஜகவில் இணைவதாக நேற்று அறிவித்தார். அவருடன், அக்கட்சியின் மேலும் 6 மாநிலங்களவை எம்.பி.க்களும் பாஜகவில் இணைவதாக அறிவித்துள்ளனர்.'நேர்மை இல்லாத கட்சி': டெல்லியில் செய்தியாளர்களிடம் ராகவ் சத்தா நேற்று கூறியதாவது: ஆம் ஆத்மி கட்சியின் மாநிலங்களவை எம்.பி.க்களில் மூன்றில் 2 பங்கினர் பாஜகவில் இணைய முடிவு செய்துள்ளோம். என்னுடன் சேர்ந்து ஸ்வாதி மாலிவால், ஹர்பஜன் சிங், சந்தீப் பதக், அசோக் மிட்டல், ராஜேந்தர் குப்தா, விக்ரம் சாஹ்னி என மொத்தம் 7 எம்.பி.க்கள் ஆம் ஆத்மியில் இருந்து வெளியேறி உள்ளோம். எனது வாழ்வின் 15 ஆண்டுகளை ஆம் ஆத்மி கட்சியின் வளர்ச்சிக்காக அர்ப்பணித்தேன். ஆனால், நேர்மையான அரசியலை முன்னிறுத்தி தொடங்கப்பட்ட இந்த இயக்கம், தற்போது அந்த பாதையில் இருந்து விலகிவிட்டது. நியாயமான மனிதனாகிய நான் தவறான, நேர்மை இல்லாத ஒரு கட்சியில் இருந்ததை இப்போது உணர்கிறேன். எனவே, ஆம் ஆத்மி கட்சியில் இருந்து விலகி மக்களுக்காகப் பணியாற்ற முடிவெடுத்துள்ளேன். இவ்வாறு அவர் கூறினார்.7 பேரும் கையெழுத்திட்ட கடிதத்தை மாநிலங்களவைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணனிடம் அவர் சமர்ப்பித்துள்ளார். டெல்லியில் உள்ள பாஜக தலைமை அலுவலகத்துக்கு வந்த அவர்களை அக்கட்சியின் தேசியத் தலைவர் நிதின் நவீன், இனிப்பு வழங்கி வரவேற்றார்.

மாநிலங்களவையில் ஆம் ஆத்மி கட்சிக்கு மொத்தம் 10 எம்.பி.க்கள் உள்ளனர். இந்த நிலையில், அங்கிருந்து 7 எம்.பி.க்கள் விலகி பாஜகவில் இணைவது, ஆம் ஆத்மிக்கு பெரும் பின்னடைவாக கருதப்படுகிறது.கட்சித் தாவல் தடைச் சட்டத்தின்படி, ஒரு கட்சியின் மூன்றில் 2 பங்கு உறுப்பினர்கள் விலகி, வேறொரு கட்சியில் இணைந்தால் மட்டுமே அவர்களின் பதவி பறிபோகாது. இந்த நிலையில், தற்போது மூன்றில் 2 பங்கு உறுப்பினர்கள் ஒரே நேரத்தில் விலகியுள்ளதால், அவர்கள் மீது கட்சித் தாவல் தடைச் சட்டம் பாயாது. இதற்கிடையே, ராகவ் சத்தா, அசோக் மிட்டல், சந்தீப் பதக் ஆகிய 3 பேரையும் மாநிலங்களவை எம்.பி. பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்யக் கோரி மாநிலங்களவைத் தலைவரிடம் கடிதம் அளிக்க உள்ளதாக அக்கட்சியின் மற்றொரு எம்.பி. சஞ்சய் சிங் தெரிவித்துள்ளார்.



# மின் தளவாடங்களில் பழுதை 30 நிமிடத்தில் சரி செய்ய வேண்டும்

## பொறியாளர்களுக்கு அறிவுறுத்தல்

சென்னை, ஏப்.26-

மின் தளவாடங்களில் ஏற்படும் பழுதை 30 நிமிடங்களில் சரி செய்ய வேண்டும் என பொறியாளர்களுக்கு மின்வாரியம் அறிவுறுத்தியுள்ளது.

தமிழகத்தில் கோடை வெயிலின் தாக்கம் கடந்த சில நாட்களாக அதிகரித்து வருகிறது. இதனால் வீடு, அலுவலகங்களில் ஏசி பயன்பாடு அதிகரித்துள்ளது. மின் பயன்பாடு அதிகரிப்பதோடு, மின்மாற்றிகள், மின் விநியோகப் பெட்டி உள்ளிட்ட சாதனங்கள், அதிக மின்பளு காரணமாக பழுதாவதால், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மின் தடை ஏற்படுகிறது. அதேபோல், இரவில் ஏசி பயன்பாடு அதிகமாக இருப்பதால் அவ்வப்போது மின் தடை ஏற்படுகிறது.

இந்நிலையில் மின் தளவாடங்களில் ஏற்படும் பழுதை 30 நிமிடங்களில் சரி செய்து உடனடியாக விநியோகத்தை சரி செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து மின் வாரிய அதிகாரிகள் கூறியதாவது: துணை மின்நிலையங்களில் இருந்து, மின் வழித்தடங்களில் மின்சாரத்தை அனுப்பி, மின் தளவாடங்களின் உதவியுடன், மின்சாரம் விநியோகம் செய்யப்படுகிறது. ஒரு வழித்தடத்தில் பழுது ஏற்பட்டாலும், இரண்டாவது வழித்தடத்தில் மின்சாரம் அனுப்பும் வசதி உள்ளது. இதேபோல், மின்மாற்றிகளில் இருந்து வழித்தடத்தில் பழுது ஏற்பட்டாலும், மற்றொன்றின் வாயிலாக மின்சாரம் விநியோகம் செய்யப்படுகிறது. வெயிலால் மக்கள் சிரமப்படும் நிலையில், மின் சாதனங்களில் பழுது ஏற்பட்டால், மாற்று வழித்தடத்தில் விரைவாக மின்சாரத்தை வழங்க வேண்டும்.

மேலும், 30 நிமிடங்களுக்குள் பழுதை சரி செய்து, மின்சாரம் வழங்க வேண்டும் என, பிரிவு அலுவலகப் பொறியாளர்களுக்கு உத்தரவிடப்பட்டு உள்ளது. தேவைப்படும் மாற்று சாதனங்களை நேரடியாக வாங்கிக் கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. பழுது நீக்கும் பணிக்காக ஏற்கெனவே, ஒரு அலுவலகத்துக்கு 5 முதல் 8 பணியாளர்கள் தற்காலிகமாக நிய மிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# “வெளியிடப்படாத புத்தகத்துக்காக என்னை இழுத்தது தேவையற்றது” முன்னாள் ராணுவ தளபதி நரவனே



புதுடெல்லி, ஏப்.26-

வெளியிடப்படாத தனது புத்தகத்தை மேற்கோள்காட்டி தன்னை வெளிச்சத்துக்கு இழுத்தது தேவையற்றது என்று முன்னாள் ராணுவத் தளபதி ஜெனரல் மனோஜ் நரவனே கூறியுள்ளார்.

ஃபோர் ஸ்டார்ஸ் ஆப் டெஸ்டினி (Four Stars of Destiny) என்ற பெயரில் நரவனே புத்தகம் ஒன்றை எழுதி இருந்தார். கடந்த 2020ல் இந்தியா சீனா இடையே ஏற்பட்ட மோதலின்போது, சீன ஆக்கிரமிப்பை எதிர்கொள்ளும் முடிவை அரசியல் தலைமை, முழுவதுமாக ஆயுதப் படைகளிடமே விட்டுவிட்டது என அந்த புத்தகத்தில் எழுதி இருந்ததாக புகார் எழுந்தது.வெளிவராத அந்த புத்தகத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் இந்த விவகாரத்தை காரணமாகக் காட்டி, கடந்த பிப்ரவரியில் எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் தொடர் அமளியில் ஈடுபட்டன. இதனால், இந்த புத்தகமும், நரவனேவும் சர்ச்சையில் சிக்கினர்.

இந்நிலையில், பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு பேட்டி அளித்துள்ள நரவனே, “புத்தகம் சரிபார்க்கப்படும் வரை அதை வெளியிடுவதை நிறுத்திவைக்குமாறு பாதுகாப்பு அமைச்சகம், பதிப்பாளரிடம் கேட்டிருந்தது. என்னைப் பொறுத்தவரை அந்த விஷயம் அத்துடன் முடிந்துவிட்டது. நான் அதில் இருந்து மீண்டுவிட்டேன். எனவே, அது ஒரு முடிந்துபோன அத்தியாயம். மேலும், என்னை தேவையில்லாமல் மேற்கோள் காட்டி, வெளியிடப்படாத புத்தகத்தை வெளிச்சத்துக்கு இழுத்ததும், அதன் மூலம் மறைமுகமாக என்னையும் வெளிச்சத்துக்கு இழுத்ததும் தேவையற்றது என்று நான் நினைக்கிறேன். நான் ஏற்கனவே இரண்டு புத்தகங்களை எழுதி இருக்கிறேன். மூன்றாவது புத்தகம் விரைவில் வெளியிடப்படும்'' என தெரிவித்துள்ளார்.ஃபோர் ஸ்டார்ஸ் ஆப் டெஸ்டினி புத்தகத்தின் ஒரு அத்தியாயத்தில், கிழக்கு லடாக்கில் சீன படைகள் முன்னேறி வந்தபோது, பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் உள்ளிட்ட உயர்மட்ட தலைவர்களிடம் இருந்து அவசரமாக தெளிவான உத்தரவை அப்போதைய ராணுவத் தளபதியான தான் கோரியதாகவும், நிலைமை மோசமடைந்து வந்த போதிலும் பீரங்கித் தாக்குதல் மூலம் பதிலடி கொடுக்க இந்திய ராணுவம் தயாராக இருந்தபோதிலும் அதற்கான அனுமதி தனக்கு கிடைக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். பிரதமரிடம் பேசிவிட்டு பிறகு அழைப்பதாக தெரிவித்த பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், பிரதமருடன் பேசிய பிறகு மீண்டும் அழைத்ததாகவும் அப்போது, உங்களுக்கு எது சரியோ அதைச் செய்யுங்கள் என பிரதமர் அறிவுரை வழங்கியதாக ராஜ்நாத் சிங் தெரிவித்ததாக நரவனே அந்த புத்தகத்தில் தெரிவித்துள்ளார். அதாவது, முடிவு முற்றிலும் ராணுவத்தின் முடிவாக இருக்க வேண்டும் என்று அரசு முடிவெடுத்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். நரவனேவின் இந்த பதிவு நாடாளுமன்ற கூட்டத்தொடரையே முடக்கிய நிலையில், அது ஒரு தேவையற்ற சம்பவம் என தற்போது அவர் தெரிவித்துள்ளார்.

# 'தெலங்கானா ராஷ்ட்ரிய சேனா' கட்சியை தொடங்கியது ஏன்? கவிதா விவரிப்பு



ஹைதராபாத், ஏப்.26-

பாரத் ராஷ்ட்ரிய சமிதி கட்சியின் முன்னாள் தலைவரான கவிதா, தெலங்கானா ராஷ்ட்ரிய சேனா என்ற புதிய கட்சியை தொடங்கி உள்ளார்.தெலங்கானா முன்னாள் முதல்வரும் பாரத் ராஷ்ட்ரிய சமிதி கட்சியின் தலைவருமான சந்திரசேகர ராவின் மகளான கவிதா, ஒழுங்கு நடவடிக்கை காரணமாக கட்சியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டார். பாரத் ராஷ்ட்ரிய சமிதி கட்சியின் மூத்த தலைவர்களான டி. ஹரிஷ் ராவ் மற்றும் ஜே. சந்தோஷ் ராவ் ஆகியோருக்கு எதிராக கருத்து தெரிவித்ததை அடுத்து கடந்த ஆண்டு செப்டம்பரில் கவிதா மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதையடுத்து, தெலங்கானா ஜாக்ருதி எனும் தன்னார்வ அமைப்பைத் தொடங்கிய கவிதா, தற்போது தெலங்கானா ராஷ்ட்ரிய சேனா என்ற கட்சியை தொடங்கி உள்ளார். இதற்கான தொடக்க விழா ஹைதராபாத்தில் நடைபெற்றது. தனது கட்சியின் பெயரை சுருக்கமாக டிஆர்எஸ் என அவர் அறிவித்தார். பாரத் ராஷ்ட்ரிய சமிதி கட்சி முன்பு தெலங்கானா ராஷ்ட்ரிய சமிதி என்ற பெயரில் இருந்தது. அப்போது அக்கட்சி டிஆர்எஸ் என அழைக்கப்பட்டது. தற்போது அதேபோல்டிஆர்எஸ் உருவாக்கப்பட்டுள்ளது.

புதிய அரசியல் கட்சி தொடங்கப்பட்டதை அடுத்து பேசிய கவிதா, “தெலங்கானா மாநில விருப்பங்களை நிறைவேற்றவே தெலங்கானா ராஷ்ட்ரிய சமிதி கட்சி உருவாக்கப்பட்டது. ஆனால் கட்சியின் பெயர், செயல்பாடுகள் உள்பட கட்சியின் ஆன்மாவையே அவர்கள் மாற்றிவிட்டனர். இதன் காரணமாகவே, மக்களுடனான கட்சியின் பிணைப்பு அறுந்துபோனது. ஓர் அரசியல் கட்சி தனது அடிப்படை நோக்கத்தில் இருந்து திசை திருப்பப்படும்போது அதனால் நிலைத்து நிற்க முடியாது. தெலங்கானாவின் நிறைவேறாத செயல்திட்டங்கள், விருப்பங்களை முன்னெடுத்துச் செல்ல ஒரு மாநில கட்சி தேவைப்படுகிறது. அத்தகைய பிராந்திய கட்சியாகவே எங்கள் கட்சி விளங்கும்.என் தந்தை தலைவராக இருக்கும் பிஆர்எஸ் கட்சி, எங்களை வெளியேற்றி விட்டது. நாங்களாக வெளியேறவில்லை. நாங்கள் அவர்களை விட்டு விலகவில்லை. ஆனால், அவர்கள் எங்களை வெளியேற்றிவிட்டார்கள்.

நான் தெலங்கானாவின் மகள். என் ரத்தத்தில் தெலங்கானாவே ஓடுகிறது. தெலங்கானாவின் உறுதி என்னுள் நிறைந்துள்ளது. நாங்கள் மிகவும் பிடிவாதம் நிறைந்தவர்கள். எங்கள் லட்சியத்தில் மிகுந்த அர்ப்பணிப்பு கொண்டவர்கள். எங்கள் வாழ்வின் 20 ஆண்டுகளை தெலங்கானா போராட்டத்துக்காகவே செலவிட்டோம். தெலங்கானாவை மேம்படுத்தவும், அதன் விருப்பங்களை நிறைவேற்றவும் நாங்கள் பாடுபடுவோம். எங்கள் பழைய கட்சி எங்களுடன் இருந்தாலும் சரி; இல்லாவிட்டாலும் சரி, எங்கள் குடும்பம் எங்களுடன் துணை நின்றாலும் சரி; துணை நிற்காவிட்டாலும் சரி தெலங்கானா மக்களே எனது குடும்பம் என்று நான் உறுதியாக நம்புகிறேன். தெலங்கானா மண்ணின் வாசம் எங்களை வழிநடத்திச் செல்லும்'' என தெரிவித்தார்.

# உக்ரைன் போரில் 10 இந்தியர்கள் உயிரிழப்பு: உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தகவல்



புதுடெல்லி, ஏப்.26-

உக்ரைன் போரில் 10 இந்தியர்கள் உயிரிழந்து இருப்பதாகவும் பலர் விருப்பப்பட்டு சென்றதாகவும் உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தகவல் தெரிவித்துள்ளது.இந்த விவகாரம் தொடர்பாக ரஷ்யாவில் வசிக்கும் திவ்யா தாக்கல் செய்த பொதுநல மனுவில் கூறப்பட்டுள்ளதாவது: 26 இந்தியர்கள் சுற்றுலா பயணிகளாகவும், படிக்கவும் ரஷ்யாவுக்கு கடந்த ஆண்டு செப்டம்பர், அக்டோபரில் சென்றனர். வேலைவாய்ப்பு வழங்குவதாக அழைக்கப்பட்ட அவர்களின் பாஸ்போர்ட், அடையாள ஆவணங்கள் பறிக்கப்பட்டு, மிரட்டி உக்ரைனுடனான போரில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களை கண்டறிந்து தாயகம் அனுப்பி வைக்கும் நடவடிக்கையை எடுக்க மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது. இந்த பொதுநல மனு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு நேற்று விசாரித்தது.அப்போது மத்திய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஐஸ்வர்யா பாட்டி தாக்கல் செய்த மனுவில் ''26 நபர்களில் 10 பேர் உக்ரைன் உடனான போரில் உயிரிழந்து இருப்பதாகவும், உயிரிழந்தோரின் குடும்பங்களுடன் வெளியுறவுத்துறை அமைச்சகம் தொடர்பில் இருப்பதாகவும், உக்ரைன் உடனான போரில் பலர் விருப்பப்பட்டு சென்றிருப்பதாகவும், சில ஏஜெண்டுகள் தவறாக வழி நடத்தி இருக்க கூடிய சம்பவங்களும் இருப்பதாகவும், ரஷ்யாவுக்கு 215 இந்தியர்கள் சென்றிருப்பதாகவும்'' தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்த விவகாரத்தில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை நிலை அறிக்கை தாக்கல் செய்ய வெளியுறவு அமைச்சகத்துக்கு உத்தரவிட்டு விசாரணையை உச்ச நீதிமன்றம் தள்ளி வைத்துள்ளது.

# மதுரை சித்திரை திருவிழா அடிப்படை வசதிகளை அரசு நிறைவேற்ற இந்து முன்னணி வலியுறுத்தல்



சென்னை, ஏப்.26-

பல லட்சம் பக்தர்கள் கலந்து கொள்ளும் மதுரை மீனாட்சி அம்மன் கோயில் சித்திரை திருவிழாவுக்கான அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து தரப்பட வேண்டும் என்று இந்து முன்னணி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக இந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கை: மதுரை மீனாட்சி அம்மன் கோயில் கள்ளழகர் ஆற்றில் இறங்கும் சித்திரை திருவிழாவானது ஆண்டுதோறும் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டு வருகிறது. வருடா வருடம் சித்திரை திருவிழாவுக்கு வருகை தரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

இந்த ஆண்டு நடைபெறும் இந்த திருவிழாவில் பக்தர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தி தர இந்து சமய அறநிலையத்துறை முனைப்புடன் செயல்பட வேண்டும்.அக்னி வெயில் சுட்டெரிப்பதால் பக்தர்கள் தங்குவதற்கு ஆங்காங்கே நிழற்குடைகள் அமைப்பது, குடிநீர் வசதிகளை ஏற்படுத்தித் தருவது, போக்குவரத்து நெரிசலை சரி செய்வது போன்ற முக்கியமான பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

ஏற்கனவே மதுரை மீனாட்சி அம்மன் கோயிலைச் சுற்றி சராசரி நாட்களிலேயே இருசக்கர, நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துவது மிகவும் கடினமானதாக உள்ளது. திருவிழா காலம் என்பதால் அதிகமான வாகனங்கள் போக்குவரத்து நெரிசலை ஏற்படுத்தும். எனவே வாகனங்களை நிறுத்துவதற்கு ஏதுவாக பார்க்கிங் வசதிகளை அதிகப்படுத்த வேண்டும்.

மேலும், போக்குவரத்து இடையூறு ஏற்பட்டால் அவசர காலத்தில் மக்கள் செல்வதற்கு இடையூறாக இருக்கும். எனவே போக்குவத்து நெரிசலை கட்டுக்குள் கொண்டுவர அதிக காவலர்களை பணியில் ஈடுபடுத்த வேண்டும்.சிறு குழந்தைகள் முதல் வயதான பெரியவர்கள் வரை இந்த விழாவில் அதிக அளவில் கலந்து கொள்வதால் மருத்துவ முதலுதவி வசதிகளை ஆங்காங்கே ஏற்படுத்த வேண்டும். மிகவும் தொன்மையான சித்திரை திருவிழாவில் பொதுமக்களும் பக்தர்களும் தாமாக முன்வந்து அன்னதானம் நீர் மோர் பந்தல் அமைப்பது போன்ற சமூகப் பணிகளில் ஈடுபடுகின்றனர். பக்தி நோக்கோடு அமைக்கப்படும் இது போன்ற காரியங்களுக்கு அரசாங்கம் எந்த விதமான தொந்தரவும் செய்யக்கூடாது என கேட்டுக்கொள்கிறோம்.

வெளியூர்களில் இருந்தும், வெளி மாநிலங்களில் இருந்தும் பக்தர்கள் திரளாக கலந்து கொள்வதால் அவர்கள் தங்குவதற்கான தற்காலிக ஏற்பாடுகளையும் அறநிலையத்துறை முன்னின்று ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

சித்திரை திருவிழாவில் மீனாட்சி திருக்கல்யாணம் என்பது மிகவும் முக்கியமான நிகழ்வாகும். இந்த திருக்கல்யாணத்தை காண்பதற்காக பக்தர்களுக்கு வழங்கப்படும் டிக்கெட்டுகளில் முறைகேடு நடப்பதாக புகார் வந்துள்ளது. திருக்கல்யாணம் மற்றும் தரிசனம் சம்பந்தமான தகவல்களை இணைய வழியில் தருகிறோம் என அறநிலையத்துறை அறிவித்துள்ளது. ஆனால் பக்தர்கள் இணையத்தில் சென்று தேடினால் அந்த இணைய பக்கம் முடக்கப்பட்டிருக்கிறது. இதனால் டிக்கெட் முன்பதிவு செய்வதற்கு பக்தர்கள் சிரமப்படுகின்றனர். திருக்கல்யாண வைபவ டிக்கெட்டுகள் கள்ளச் சந்தையில் விற்கப்படுவதாகவும் பலர் தெரிவிக்கின்றனர்.

சாதாரண காலங்களில் கோயில்களில் தரிசன முறை கட்டணமும் சிறப்பு பூஜைகளுக்கான கட்டணமும் பக்தர்களை சிரமப்படுத்தி வரும் வேளையில் மிகவும் முக்கியத் திருவிழாவான திருக்கல்யாணத்திலும் பணம் சம்பாதிப்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு கள்ளச் சந்தையில் டிக்கெட் விற்பது கண்டனத்துரியதாகும்.

இது போன்ற முறைகேடுகளை இந்து சமய அறநிலையத்துறை ஆராய்ந்து மக்களுக்கு அடிப்படை வசதிகளை செய்து தருவதுடன் திருவிழா காலங்களில் முறையான தரிசனத்தை பக்தர்கள் பெறுவதற்கு தகுந்த ஏற்பாடுகளை செய்ய வேண்டும் எனவும் இந்து முன்னணி சார்பாக கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கு 4 அடுக்கு பாதுகாப்பு



சென்னை, ஏப்.26-

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்குகள் பதிவாகியுள்ள மின்னணு இயந்திரங்கள், வாக்கு எண்ணிக்கை நடைபெறும் 62 மையங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இந்த மையங்களில் 4 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

தமிழக சட்டப்பேரவை பொதுத் தேர்தல் வாக்குப்பதிவு கடந்த 23ம் தேதி ஒரே கட்டமாக நடைபெற்றது. 234 தொகுதிகளிலும் அமைக்கப்பட்டிருந்த 75,064 வாக்குச்சாவடிகளில் காலை 7 மணி முதலே வாக்காளர்கள் ஆர்வத்துடன் வந்து வாக்களித்தனர். இதனால், வரலாறு காணாத வகையில், 85.15 சதவீத வாக்குகள் பதிவாகின.மாலை 6 மணிக்கு வாக்குப்பதிவு முடிந்ததும், மின்னணு இயந்திரங்கள், விவிபாட் மற்றும் கட்டுப்பாட்டு இயந்திரங்கள் அனைத்தும் வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில் சீலிடப்பட்டன. பின்னர், வாக்கு எண்ணிக்கைக்காக தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ள 62 மையங்களுக்கு பலத்த போலீஸ் பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்பட்டன.

வாக்கு எண்ணும் மையங்களுக்கு வாக்குப்பதிவு இயந்திரங்கள் முழுமையாக கொண்டு வரப்பட்டதும், பாதுகாப்பு அறையில் ('ஸ்டிராங் ரூம்') வைத்து, வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில் சீலிடப்பட்டன. இந்த அறைகளை சுற்றிலும் 4 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.மத்திய ஆயுதக் காவல் படையினர், தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினர், சட்டம் ஒழுங்கு, குற்றப்பிரிவு, போக்குவரத்து போலீஸார் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் கண்காணிப்பு பணியை மேற்கொண்டு வருகின்றனர். சிசிடிவி கேமராக்கள் மூலமாகவும் இந்த மையங்கள் கண்காணிக்கப்படுகின்றன. அரசியல் கட்சி முகவர்களும் மையங்களுக்கு வெளியே இருந்தபடி, கண்காணித்து வருகின்றனர்.

தமிழகம் முழுவதும் உள்ள 62 வாக்கு எண்ணும் மையங்களிலும் பாதுகாப்பு பணியில் மொத்தம் 18 ஆயிரம் போலீஸார் ஈடுபட்டுள்ளனர். மே 4ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறும் வரை இந்த பாதுகாப்பு தொடரும் என்று காவல் துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாஜகவில் இணைந்ததால் இன்ஸ்டாவில் 10 லட்சம் ஃபாலோயர்களை இழந்த ராகவ் சத்தா



புது டெல்லி, ஏப்.26-

ஆம் ஆத்மி கட்சியிலிருந்து விலகி பாஜகவில் இணைந்த மாநிலங்களவை எம்.பி ராகவ் சத்தா கடந்த 24 மணி நேரத்திற்குள் இன்ஸ்டாகிராமில் 10 லட்சம் ஃபாலோயர்ஸை இழந்துள்ளார். ஆம் ஆத்மி கட்சியின் ஆறு மாநிலங்களவை எம்.பிக்களுடன் ராகவ் சத்தா ஆம் ஆத்மி கட்சியிலிருந்து விலகி பாஜகவில் இணைந்த நிலையில், சமூக ஊடகத்தில் அவரின் செல்வாக்கு சரிந்துள்ளதாக தெரிகிறது. சில வாரங்களுக்கு முன்பு ஆம் ஆத்மி கட்சியின் ராஜ்யசபா துணைத் தலைவர் பதவியிலிருந்து ராகவ் சத்தா நீக்கப்பட்ட பிறகு, நேற்று அவர் பாஜகவில் இணைந்தார். அவரின் இந்த அரசியல் நிலைப்பாடு ஜென்ஸி தலைமுறையினரைக் கவரவில்லை என்று தெரிகிறது.ராகவ் சத்தா பாஜகவில் இணைந்த 24 மணி நேரத்திற்குள் இன்ஸ்டாகிராமில் சுமார் பத்து லட்சம் ஃபாலோயர்களை இழந்துள்ளார். வெள்ளிக்கிழமை அன்று, இன்ஸ்டாகிராமில் ராகவ் சத்தாவிற்கு 1.46 கோடி ஃபாலோயர்கள் இருந்தனர். சனிக்கிழமை மதியம் 1 மணிக்கு, அவரது ஃபாலோயர்களின் எண்ணிக்கை 1.35 கோடியாகக் குறைந்தது.

ராகவ் சத்தாவுக்கு எதிராக இன்ஸ்டாகிராமில் 'பின்தொடர்வதை நிறுத்து' என ஜென் ஸி தலைமுறையினர் மேற்கொண்ட பிரச்சாரம், 24 மணி நேரத்தில் அவரின் பின்தொடர்பவர்களின் எண்ணிக்கை 10 லட்சம் குறைய வழிவகுத்துள்ளது என்று என்சிபி (எஸ்பி) செய்தித் தொடர்பாளர் அனிஷ் கவாண்டே ட்வீட் செய்துள்ளார். "இணையம் ஒரே இரவில் உங்களை ஒரு கதாநாயகனாக மாற்ற முடியும். அதே இணையம் ஒரே இரவில் உங்களை பூஜ்ஜியத்திற்கும் கொண்டு செல்ல முடியும்" என்று அவர் கூறினார்."un-followRag havChadha" என்ற ஹேஷ்டேக் சமூக ஊடகங்கள் வேகமாக பகிரப்பட்டு வருகிறது. இந்தச் சூழலில், பிரதமர் நரேந்திர மோடி மற்றும் பாஜகவை விமர்சிக்கும் தனது பழைய பதிவுகளை ராகவ் சத்தா நீக்கிவிட்டதாகவும் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# தவெக உத்தேச அமைச்சர் பட்டியல் தயாரித்தாக திமுக பொய்ப் பிரச்சாரம்

## சி.டி.நிர்மல்குமார்

சென்னை, ஏப்.26-

"சமூக ஊடகங்களில் பரப்பப்படும் உத்தேச அமைச்சர் பட்டியல் விவகாரம் முற்றிலும் பொய்யான பிரச்சாரம். திமுகவினரே இது போன்று திட்டமிட்டு பரப்புகின்றனர்'' என தவெக இணை செயலாளர் சி.டி.நிர்மல்குமார் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "மக்கள் மாற்றத்தை எதிர்ப்பார்த்து அலை அலையாக வாக்களித்துள்ளனர். தோல்வி பயத்தால் திமுகவினர் வழக்கம்போல் ரவுடி தனத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.சைதாப்பேட்டை, எழும்பூர் ஆகிய இடங்களில் தவெகவினர் தாக்கப்பட்டுள்ளனர். திருச்சி கிழக்கில் இரவு ஒரு மணி வரை கள்ள ஓட்டு பதிவு செய்யப்பட்டதாக தகவல் கிடைத்துள்ளது. எல்லா இடத்திலும் அதிகாரிகள், காவல்துறையினரின் உதவியோடு திமுகவினருக்கு துணை போகின்றனர்.நாங்கள் அளித்த புகார் தொடர்பாக இதுவரை வழக்கு பதிவு செய்யப்படவில்லை. பேருந்து வசதி வேண்டுமென்றே தடை செய்யப்பட்டது. முக்கியமான பேருந்துகள் இயக்கப்படவில்லை. 20 லட்சம் பேர் வாக்களிக்கவில்லை. மக்கள் மாற்றத்தை விரும்புகிறார்கள்.ஸ்டாலினும், உதயநிதியும் செய்யும் ஒரே பெரிய வேலை தேர்தலில் பிரச்சாரம் செய்வதுதான். இனிமேல் அவர்களுக்கு முழு ஓய்வுதான். தீயசக்தியான திமுகவை எதிர்த்துதான் பேசிக் கொண்டிருக்கிறோம்.



தமிழகத்தில் களத்திலேயே இல்லாத பாஜகவைப் பற்றி எதற்கு பேச வேண்டும். மக்களே புறக்கணித்த கட்சி பாஜக. அதே வேலையில் பேச வேண்டிய இடத்தில் நிச்சயம் பேசுவோம்.முதல்வர் கொடைக்கானலுக்கு சென்று இருக்கிறார். இதனால் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுகிறது. இம்முறை அதிகப்படியான மக்கள் வாக்களித்துள்ளனர்" என்றார்.பின்னர், தவெகவின் அமைச்சர் பட்டியல் குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், "சமூக ஊடகங்களில் பரப்பப்படும் உத்தேச அமைச்சர் பட்டியல் விவகாரம் முற்றிலும் பொய்யான பிரச்சாரம். திமுகவினர் இது போன்று திட்டமிட்டு பரப்புகின்றனர்'' என்று தெரிவித்தார்.

## ஈரான் போர் தாக்கம்

# அமெரிக்காவின் ஆயுத கையிருப்பு கணிசமாகக் குறைந்தது



வாஷிங்டன், ஏப்.26-

ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் கடந்த மார்ச் 28ம் தேதி தாக்குதலை தொடங்கின. இந்த போர் 38 நாட்கள் நடைபெற்றது. அதன் பின் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் 2 வார கால சண்டை நிறுத்த ஒப்பந்தம் அறிவித்தார்.இந் நிலையில் அமெரிக்க ராணுவம் கூறியதாவது: ஈரானில் மொத்தம் 13,000க்கும் மேற்பட்ட இலக்குகளைத் தாக்கினோம். ஈரான் போரில் 1,000க்கும் மேற்பட்ட டொமஹாக் ஏவுகணைகள் பயன்படுத்தப்பட்டன. இது அமெரிக்க ராணுவம் ஒவ்வொரு ஆண்டும் வாங்கும் எண்ணிக்கையை விட 10 மடங்கும் அதிகம். ஒரு டொமஹாக் ஏவுகணையின் விலை 3.6 மில்லியன் டாலர்.

இவை தொலைதூர இலக்குகளைத் தாக்கும் திறன் படைத்தவை. ஈரான் போரில் 1,000க்கும் மேற்பட்ட டொமஹாக் ஏவுகணை பயன்படுத்தப்பட்டதால், அமெரிக்காவின் டொமஹாக் ஏவுகணையின் கையிருப்பு 3,000மாக குறைந்துள்ளது. இதே போல், எதிரி விமானங்கள் மற்றும் ஏவுகணைகளை நடுவானில் இடைமறித்து அழிக்க 1,200 பேட்ரியாட் ஏவுகணைகளை ஈரான் போரில் அமெரிக்கா பயன்படுத்தியது.இதன் விலை 4 மில்லியன் டாலருக்கு மேலாகும். கடந்தாண்டில் 600 பேட்ரியாட் ஏவுகணைகளை மட்டுமே அமெரிக்கா உற்பத்தி செய்தது. மேலும், வானில் இருந்து தரை இலக்குகளை தாக்கும் 1,100 (ஜாஸ்மர்) ஏவுகணைகளையும் அமெரிக்க ராணுவம் ஈரான் போரில் பயன்படுத்தியது. இதன் காரணமாக இந்த வகை ஏவுகணைகள் அமெரிக்க ராணுவத்தில் தற்போது 1,500 மட்டுமே இருப்பில் உள்ளது. இது 600 மைல் தூரமுள்ள இலக்குகளைத் தாக்கும்.இதன் விலை 1.1 மில்லியன் டாலர். 1,000க்கும் மேற்பட்ட ஏடிஏசிஎம்எஸ் என்ற தரை இலக்குகளைத் தாக்கும் ஏவுகணைகளையும் ஈரான் போரில் அமெரிக்கா பயன்படுத்தியது. இவ்வாறு அமெரிக்க ராணுவம் கூறியுள்ளது. ஈரான் போர் காரணமாக ஆசியா, மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ முகாம்களில் ஆயுத கையிருப்பு குறைந்துள்ளது.ஈரானின் விலை குறைந்த ட்ரோன் தாக்குதலை சமாளிக்க, அமெரிக்கா அதிக விலையுள்ள பேட்ரியாட் ரக ஏவுகணைகளைப் பயன்படுத்தியது. காலியான ஆயுதங்களை மீண்டும் வாங்க கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும் என அமெரிக்க நாடாளுமன்றத்தில் பென்டகன் கோரிக்கை விடுத்துள்ளது. இதற்கு வெகு நாட்களாகும் எனத் தெரிகிறது.

# கும்பகோணத்தில் இருந்து உதகைக்கு சுற்றுலா வந்த வேன் கவிழ்ந்த விபத்தில் 6 பேர் காயம்



கூடலூர் மலைப்பாதை

ஊட்டி, ஏப்.26-

கும்பகோணத்தில் இருந்து உதகைக்கு சுற்றுலா வந்த வேன் கவிழ்ந்த விபத்தில் 6 பேர் காயம் அடைந்தனர். உதகையில் சுற்றி பார்த்துவிட்டு வழியாக முதுமலை நோக்கி சென்றபோது விபத்துக்குள்ளானது. ஊசி மலை அருகே கட்டுப்பாட்டை இழந்த வேன் சாலையோரம் கவிழ்ந்ததில் 6 பேர் காயமடைந்துள்ளனர்

# தேர்தலுக்கு முந்தைய நாள் இரவில் கிளாம்பாக்கத்தில் இருந்து பேருந்துகள் புறப்பட தாமதம் ஏன்? போக்குவரத்து துறை விளக்கம்



சென்னை, ஏப்.26-

தேர்தலுக்கு முந்தைய நாள் இரவில் சென்னை கிளாம்பாக்கத்தில் இருந்து வெளியூர்களுக்கு பேருந்துகள் புறப்பட்டுச் செல்வதில் ஏற்பட்ட தாமதம் குறித்து போக்குவரத்து துறை விளக்கம் அளித்துள்ளது. தேர்தலையொட்டி சென்னையில் இருந்து இயக்கப்பட்ட 10,637 பேருந்துகளில் 6.25 லட்சம் பேர் பயணம் செய்ததாகவும் தெரிவித்துள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப்பதிவு கடந்த 23ம் தேதி நடைபெற்றது. இதையொட்டி, சொந்த ஊரில் வாக்களிப்பதற்காக சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இருந்து பல லட்சம் பேர் பேருந்துகள், ரயில்கள், சொந்த வாகனங்களில் புறப்பட்டுச் சென்றனர்.

பேருந்துகள், ரயில்களில் முன்பதிவு செய்யாதவர்களும், திடீரென பயணத்தை திட்டமிட்டவர்களும் முந்தைய நாளான 22ம் தேதி இரவு சென்னை கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்துக்கு வந்தனர். ஆனால், அங்கிருந்து திருச்சி, மதுரை, கோவை, நெல்லை உள்ளிட்ட முக்கிய நகரங்களுக்கு போதிய பேருந்துகள் இயக்கப்படாததால் பயணிகள் கடும் அவதியடைந்தனர். குழந்தைகள், பெண்கள் விடிய விடிய பேருந்து நிலையத்திலேயே காத்திருக்கும் நிலை ஏற்பட்டது. இதனால், பயணிகள் சாலை மறியலிலும் ஈடுபட்டனர். மறுநாள் காலை 9 மணிக்குப் பிறகே நிலைமை சீரடைந்தது.

இதுகுறித்து அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் ஆர்.மோகன் கூறியதாவது: கடந்த 21ம் தேதி வழக்கமான 2,092 பேருந்துகள், கூடுதலாக 1,339 சிறப்பு பேருந்துகள் என மொத்தம் 3,431 பேருந்துகள் இயக்கப்பட்டு, 1.89 லட்சம் பேர் பயணம் மேற்கொண்டனர். 22ம் தேதி முதல் 23ம் தேதி நண்பகல் 12 மணி வரை, வழக்கமான 3 ஆயிரம் பேருந்துகள், கூடுதலாக 4,206 சிறப்பு பேருந்துகள் என மொத்தம் 7,206 பேருந்துகள் இயக்கப்பட்டு, 4.38 லட்சம் பேர் பயணம் மேற்கொண்டனர். அந்த வகையில், 21ம் தேதி முதல் 23ம் தேதி காலை 6 மணி வரை, மொத்தம் 10,637 பேருந்துகள் இயக்கப்பட்டு, 6.25 லட்சம் பேர் பயணம் மேற்கொண்டனர். எனவே, பேருந்துகள் முறையாக இயக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டில் உண்மை இல்லை.

தவிர, சென்னையில் இருந்து மதியம், மாலை நேரத்தில் விழுப்புரம், திண்டிவனம், திருவண்ணாமலைக்கு இயக்கப்படும் பேருந்துகள் இரவில் சென்னை திரும்பிவிடும். இந்த பேருந்துகள் இரவு மீண்டும் இயக்கப்படும். ஆனால், திட்டமிட்ட நேரத்துக்கு அந்த பேருந்துகள் செல்லாததால், சென்னை திரும்ப தாமதம் ஏற்பட்டது. சென்னையில் இருந்து ஏராளமானோர் தங்கள் சொந்த வாகனங்களில் புறப்பட்டுச் சென்றதால் ஏற்பட்ட போக்குவரத்து நெரிசலே இந்த தாமதத்துக்கு காரணம். இவ்வாறு அவர் கூறினார்.



■ தென்காசி மாவட்டம் கொடிக்குறிச்சி ஸ்ரீராம் நல்லமணி யாதவா கல்லூரி வாக்கு எண்ணிக்கை மையத்தில்தென்காசி மாவட்டத்திற்கென நியமிக்கப்பட்ட தேர்தல் பொதுப்பார்வையாளர்கள் நீரஜ்குமார், (கடையநல்லூர், தென்காசி), புவனேஸ் பிரதாப்சிங், இ.ஆ.ப., (சங்கரன்கோயில், வாசுதேவநல்லூர்), ஈஷாபிரியா, இ.ஆ.ப., சுஷாந்த்குமார்சக்சேனா., இ.கா.ப., மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மயில்வாகனன், இ.கா.ப., அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் மற்றும் முகவர்கள் முன்னிலையில் 5 சட்டமன்ற தொகுதியில் வாக்குப்பதிவு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை பாதுகாப்பு அறையில் வைத்து தேர்தல் நடத்தும் அலுவலர்கள் சீல் வைத்தார்கள்.

## விமான நிலைய திட்டம்: அச்சத்துக்கு விடிவு பிறக்குமா? நம்பிக்கையுடன் வாக்களித்த ஏகனாபுரம் மக்கள்

காஞ்சிபுரம், ஏப்.26-

காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூரில் விமான நிலையம் அமைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வந்த பொதுமக்கள் இந்த தேர்தலில் வாக்களித்தனர்.



வாக்களித்தவர்கள் பலர் எங்கள் போராட்டத்துக்குஆதரவாக இருந்தவர்களை ஆதரிக்க வேண்டும் என்பதற்காகவே வாக்களித்துள்ளோம் என்றும் தெரிவித்தனர்.கடந்த மக்களவைத் தேர்தலின் போது பரந்தூர் விமான நிலைய திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தேர்தலைப் புறக்கணித்திருந்த மக்கள், இம்முறை தங்கள் நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு ஆர்வத்துடன் வாக்குச் சாவடிகளுக்கு வந்தனர். பலர் நீண்ட வரிசையில் நின்று வாக்கு செலுத்தினர்.சாதகமான மாற்றம் ஏற்படும் இதுகுறித்து அந்தப் பகுதி மக்களிடம் கேட்டபோது தங்கள் போராட்டத்தைக் கண்டுகொள்ளாதவர்களுக்குப் பாடம் புகட்டவும், தங்களுக்கு ஆதரவாகத் தோள் கொடுத்தவர்களுக்குப் பலம் சேர்க்கவும் இந்த சட்டப்பேரவைத் தேர்தலைப் பயன்படுத்திக் கொண்டதாக தெரிவித்தனர்.இது தொடர்பாக ஏகனாபுரம் கிராமத்தைச் சேர்ந்த போராட்டக்காரர்கள் கூறும்போது, “எங்களது நிலத்தையும் வாழ்வாதாரத்தையும் பாதுகாக்க வேண்டும் என்பதே எங்களது முதன்மையான நோக்கம். கடந்த முறை தேர்தலைப் புறக்கணித்ததன் மூலம் எங்களது கோபத்தைப் பதிவு செய்தோம். ஆனால் இந்த முறை, எங்களது கோரிக்கைகளுக்குச் செவிசாய்த்து எங்களுக்கு ஆதரவாக நின்றவர்களுக்கு வாக்களிக்க வேண்டும் என்பதற்காகப் புறக்கணிப்பு முடிவைக் கைவிட்டோம்" என்றனர்.

வாக்களிக்க வந்த மக்கள் பலரும், குறிப்பாகத் தமிழக வெற்றிக் கழகம் மற்றும் நாம்தமிழர் கட்சி ஆகிய இரு கட்சிகளும் தங்களது போராட்டத்துக்கு உறுதியாக நின்று ஆதரவு அளித்ததாக தெரிவித்தனர்.

புதிய அரசு அமைந்ததும் பரந்தூர் விமான நிலையத் திட்டத்தில் தங்களுக்குச் சாதகமான மாற்றம் ஏற்படும் என மக்கள் நம்புகின்றனர். இதுகுறித்து பரந்தூர் விமான நிலைய எதிர்ப்புப் போராட்டக் குழுச் செயலாளர் சுப்பிரமணி கூறும்போது, “தேர்தல் முடிவுகள் எப்படி இருக்கும் என்பதையும், அதன் மூலம் அமையப்போகும் புதிய அரசையும் நாங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம்.புதிய அரசு அமைந்தவுடன் எங்கள் போராட்டத்தின் நியாயத்தை உணர்ந்து, எங்களுக்கு ஏதேனும் ஒரு வகையில் நல்லது நடக்கும் என்ற ஆழ்ந்த நம்பிக்கை எங்களுக்கு உள்ளது" என்றார்.

## அதிமுக முன்னாள் அமைச்சர் வளர்மதியின் கணவர் மீது வழக்கு

சென்னை, ஏப்.26-

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலின்போது ஆயிரம் விளக்கு தொகுதியில் ஏற்பட்ட மோதல் தொடர்பாக, முன்னாள் அமைச்சர் வளர்மதியின் கணவர் மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது. அப்போது ஆயிரம் விளக்கு தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் வளர்மதியின் கணவர் பாலசுப்பிரமணியம் (79), அத்தொகுதியில் திமுகவினர் விதிகளுக்குப் புறம்பாக மஞ்சள் நிற பூத்சிலிப்புகளை விநியோகம் செய்வதாகக் குற்றம்சாட்டி அவர்களைக் கண்டித்துள்ளார்.



இதுகுறித்து போலீஸில் அவர் புகார் அளித்தும், போலீஸார் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனக் கூறப்படுகிறது. இதனால் அதிருப்தியடைந்த பாலசுப்பிரமணியம், வள்ளுவர் கோட்டம் சந்திப்பு அருகே சாலையில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டார்.தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு வந்த போலீஸார், மறியலில் ஈடுபட்ட பாலசுப்பிரமணியத்தைச் சமாதானப்படுத்தி கலைந்து செல்லுமாறு கூறினர். இதனால் இருதரப்புக்கும் இடையே கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது.அப்போது, நுங்கம்பாக்கம் காவல் நிலைய தலைமைக் காவலர் அன்பரசனை பாலசுப்பிரமணியம் தாக்கியதாகக் கூறப்படுகிறது. இதுகுறித்து தலைமைக் காவலர் அன்பரசன் அளித்த புகாரின் அடிப்படையில், பாலசுப்பிரமணியம் மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.அதேசமயம் நுங்கம்பாக்கம் காவல் ஆய்வாளர் தன்னைத் தாக்கியதாக பாலசுப்பிரமணியம் குற்றம் சாட்டியுள்ளார். சம்பந்தப்பட்ட ஆய்வாளர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் நுங்கம்பாக்கம் காவல் நிலையத்தில் பதில் புகார் அளித்துள்ளார். இதுகுறித்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகள் விலை உயர்வு

அண்ணாநகர், ஏப்.26-

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு தமிழ்நாடு மற்றும் ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா உள்ளிட்ட பல பகுதிகளில் இருந்து லாரிகளில் காய்கறிகள் வருகின்றன. தற்போது கோடைகாலம் என்பதால் காய்கறிகள் வரத்து குறைந்து விலை கணிசமாக உயர்ந்துள்ளது. இதன்படி, ஒரு கிலோ வெங்காயம் ரூ.20 முதல் ரூ.30 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. தக்காளி 30 முதல் 40 ரூபாய்க்கும் கேரட் 50 ரூபாய்க்கும் பீன்ஸ் 80 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. அவரைக்காய் 60 ரூபாய்க்கும் கத்திரிக்காய் 25 ரூபாய்க்கும் வெண்டைக்காய் 40 ரூபாய்க்கும் பூண்டு 160 ரூபாய்க்கும் இஞ்சி 65 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. ‘‘இனிவரும் நாட்களில் காய்கறிகள் வரத்து குறைந்து மேலும் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது’’ என்று வியாபாரிகள் கூறினர்

## கோவை, ஈரோடு, சேலம், தருமபுரியில் ஏப்.30, மே 1ல் கனமழைக்கு வாய்ப்பு

சென்னை, ஏப்.26-

தமிழகத்தில் கோவை, ஈரோடு, சேலம், தருமபுரி உள்ளிட்ட மாவட்டங்களில் ஏப்.30, மே 1 தேதிகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: வடக்கு உள் கர்நாடகா முதல் குமரிக்கடல் வரை தெற்கு உள் கர்நாடகா மற்றும் தமிழகம் வழியாக சுமார் 900 மீட்டர் உயரத்தில், ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.




இதன் காரணமாக மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தென் தமிழக கடலோர மாவட்டங்களில் (ஏப்.26) ஒரிரு இடங்களிலும், 27ம் தேதி மேற்கூறிய இடங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களிலும் ஒரிரு இடங்களில லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.இதர தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவக்கூடும். 28, 29 தேதிகளில் நீலகிரி, கோவை, திருப்பூர் மற்றும் தேனி மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும், தென் தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஒரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும்.30ம் தேதி கோவை, ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர் மாவட்டங்களில், மே 1ம் தேதி மேற்கூறிய மாவட்டங்கள் மற்றும் நாமக்கல் மாவட்டத்திலும் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமானது முதல் கன மழையும், இதர தமிழக பகுதிகளில் ஒரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும் பெய்யக்கூடும். தமிழகத்தின் உள் மாவட்டங்களில் நாளை முதல் 29ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும். கடலோர தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பை ஒட்டியே இருக்கக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை குறைந்தபட்ச வெப்பநிலை 82 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## கைதிகளை அழைத்துச் செல்லும் போலீஸ் வாகனங்களில் சிசிடிவி கேமராக்கள்

சென்னை, ஏப்.26-

கைதிகளை நீதிமன்றம் மற்றும் சிறைக்கு அழைத்துச் செல்லும் போலீஸ் வாகனங்களில் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப் பட்டுள்ளன.சென்னையில் கொலை, கொள்ளை, வழிப்பறி உள்ளிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் நபர்கள், நீதிமன்ற உத்தரவுப்படி புழல், சைதாப்பேட்டை உள்ளிட்ட பல்வேறு சிறைகளில் அடைக்கப்படுகின்றனர்.மேலும், அவர்கள் தொடர்பான வழக்குகள் நீதிமன்றங்களில் நடைபெறும் போது, காவல் வாகனங்களில் அழைத்துச் செல்லப்பட்டு ஆஜர்படுத்தப் படுகின்றனர்.



பின்னர், அதே வாகனத்தில் அழைத்து வந்து மீண்டும் சிறையில் அடைக்கப் படுகின்றனர். பல நேரங்களில் வெளி மாவட்ட நீதிமன்றங்களுக்கும் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

சில நேரங்களில், பயங்கர ரவுடிகள் மற்றும் கொடூர குற்றவாளிகளை வாகனங்களில் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்படும்போதோ அல்லது திரும்பி வரும்போதோ பாதுகாப்புக்காக உடன் வரும் போலீஸாருடன் வீண் தகராறில் ஈடுபடுகின்றனர்.சிலசமயம் போலீஸார் தாக்கப்படுகின்றனர். ஆனால், இதன் உண்மைத் தன்மை வெளிவருவது இல்லை. யார் மீது தவறு? தாக்குதல் நடந்ததற்கு என்ன காரணம் என்பதை கண்டறிவதில் சிக்கல் ஏற்படுகிறது.

மேலும், நீதிமன்றத்தில் விசாரணை முடிந்து வாகனத்தில் சிறைக்கு அழைத்துச் செல்லும்போது கைதிகளின் உறவினர்கள் கஞ்சா பொட்டலங்களை காவல் வாகனங்களில் வீசும் சம்பவங்களும் நடைபெறுகின்றன.

இத்தகைய பிரச்சினைகளைத் தடுக்க போலீஸார் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். ஆனால், எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. இதையடுத்து, சிறைத் துறை அதிகாரிகள் மற்றும் சென்னை போலீஸ் அதிகாரிகள் ஒருங்கிணைந்து ஆலோசனை நடத்தியதில், கைதிகளை அழைத்துச் செல்லும் காவல் வாகனங்களில் சிசிடிவி கேமரா பொருத்த முடிவு செய்யப் பட்டது.அதன்படி, முதல் கட்டமாக சென்னையில் சிறைக் கைதிகளை அழைத்துச் செல்லும் 50க்கும் மேற்பட்ட காவல் வாகனங்களில் நவீன சிசிடிவி கேமராக்கள் பொருத்தப் பட்டுள்ளன.

## தேர்தல் பணியில் ஈடுபட்ட பெண் காவலரிடம் தகராறு: ரவுடி கைது

பெரம்பூர், ஏப்.26-

நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்தவர் ஜெயலட்சுமி (31), கொண்டிதோப்பு பகுதியில் உள்ள காவலர் குடியிருப்பில் வசித்து வருகிறார். புளியந்தோப்பு காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்து வருகிறார். இந்நிலையில், நேற்று முன்தினம் புளியந்தோப்பு குட்டிதம்புரான் தெருவில் உள்ள வாக்குச்சாவடியில் காவல் பணியில் ஈடுபட்டிருந்தார். அப்போது அங்கு வந்த தனக்குமார் என்பவர் மதுபோதையில் பெண் காவலர் ஜெயலட்சுமியிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

மேலும் அங்கு வந்த காவலர் காமேஷ் என்பவரை அடிக்கப் பயந்துள்ளார். அக்கம் பக்கத்தினர் தடுத்து அவரை அனுப்பி வைத்தனர். இது குறித்து பெண் காவலர் ஜெயலட்சுமி புளியந்தோப்பு காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் அடிப்படையில் புளியந்தோப்பு போலீசார் நேற்று பேசின் பாலம் காந்திநகர் பகுதியை சேர்ந்த தனக்குமார் (37) என்ற சரித்திர பதிவேடு ரவுடியை கைது செய்து சிறையில் அடைத்தனர். இவ்வழக்கில் குட்டி என்பவரை போலீசார் தேடி வருகின்றனர்



■ தென்காசி மாவட்டம் சங்கரன் கோவில் அருள்மிகு கோமதி அம்பாள் சங்கரநாராயணர் திருக்கோவிலில்சித்திரைத் திருவிழா 34 வது நாள் சுவாமி அம்பாள் 63 நாயன்மார்களுக்கு வெள்ளி ரிஷப வாகனத்தில் திருக்கயிலாய காட்சி கொடுத்தல், பஞ்ச மூர்த்திகள், 63 நாயன்மார்கள் புறப்பாடு வீதி உலா!*

## திருவாரூரில் சங்கீத மும்மூர்த்திகள் ஜெயந்தி இசை விழா

திருவாரூர், ஏப்.26-

திருவாரூர்/ தஞ்சாவூர்: சங்கீத மும்மூர்த்திகள் ஜெயந்தி இசை விழாவையொட்டி, திருவாரூரில் நேற்று இசைக் கலைஞர்கள் பஞ்சரத்ன கீர்த்தனைகளை இசைத்தனர்.திருவாரூரில் சங்கீத மும்மூர்த்திகள் ஜெயந்தி இசை விழா ஏப்.19ம் தேதி சியாமா சாஸ்திரிகள் இல்லத்தில் தொடங்கி நடைபெற்று வருகிறது. - முத்துஸ்வாமி தீட்சிதர் க்ரஹ நூதன அரங்கத்தில், மங்கல இசை மற்றும் இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெற்று வந்த நிலையில், நேற்று - சத்குரு தியாகப்ரும்மத்தின் 259வது ஜெயந்தியை முன்னிட்டு, தியாகப்ரும்மம் இல்லத்தில் காலை உஞ்சவிருத்தி, விதை தானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றன.தொடர்ந்து, முத்துசுவாமி நூதன க்ரஹ அரங்கில், பாலசுந்தரம், கார்த்தி மற்றும் உமாசங்கர், ஜெயசூர்யா குழுவினரின் நாகசுர இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.பின்னர், பிரபல வித்வான்கள், விதூஷிகள் பங்கேற்ற தியாகப்ரும்மத்தின் பஞ்சரத்ன கீர்த்தனையை, சங்கீத வித்வான்கள் டாக்டர் கணேஷ், ஆண்டாங்கோவில் சிவக்குமார், சுந்தரராஜன், வரப்பிரசாத், சுசித்ரா பாலசுப்பிரமணியன் மற்றும் வீணை, வயலின், மாண்டலின், புல்லாங்குழல், கடம், கஞ்சிரா, முகர்சிங் உள்ளிட்ட வாத்திய கலைஞர்கள் பலர்



பங்கேற்று இசைத்தனர்.

திருவையாறில் சத்குரு தியாகராஜர் சிலைக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டிருந்தது

திருவையாறில் சத்குரு தியாகராஜர் சிலைக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டிருந்தது.சங்கீத மும்மூர்த்திகள் ஜெயந்தி இசை விழாக் குழுகவுரவத் தலைவர் டாக்டர் ஆர்.ராமசுப்பு, தலைவர் கார்த்திகேயன், துணைத் தலைவர் பாஸ்கர், மும்பை ஶ்ரீதரன், வேலுடையார் கல்விக் குழுமம் தியாகபாரி, டாட்டாஸ் மதி, மணக்கால் ராமகிருஷ்ணன், ஆடிட்டர் பாலாஜி வெங்கட்ராமன், வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாவட்டத் தலைவர் ராமமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்த விழா நேற்று மாலை நிறைவடைந்தது. திருவையாறில்..

இதேபோல, தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறில் சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான சத்குரு தியாகராஜரின் 259 வது ஜெயந்தி விழா நேற்று நடைபெற்றது. தியாகராஜரின் ஜீவ சமாதியில் நடைபெற்ற இவ்விழாவில் பரம்பரை பூஜா ஸ்தானிகர் தியாகராஜ சர்மா அபிஷேகம், அலங்காரம், மகா தீபாராதனை ஆகியவற்றை செய்தார்.

மேலும், கர்னாடக இசைக் கலைஞர்கள், வித்வான்கள் தியாக பிரும்மத்தின் பஞ்சரத்தின கீர்த்தனைகள், சம்பிரதாய கீர்த்தனைகளுடன் இரவு வரை தியாகராஜருக்கு இசை அஞ்சலி செலுத்தினர்.பின்னர், ஆஞ்சநேயர் உற்சவத்துடன் ஜெயந்தி விழா நிறைவடைந்தது. விழாவையொட்டி பத்தர்களுக்கு அன்னதானம் உள்ளிட்ட பிரசாதங்கள் வழங்கப்பட்டன.










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000